**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.21/2024**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வியாழன் கிழமை எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஃபெட்ரிக்ஸ் | த/பெ.: | ஆனந்தராயன் |
| கிராமம்: | திருவாரூர் | தாலுக்கா: | திருவாரூர் |
| மதம்: | கிறிஸ்துவர் | தொழில்: | உதவி மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், தஞ்சாவூர். |
| வயது: | 32 | முகவரி: | திருவாரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 20.11.2025

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 18.03.2024 | ஆராய்வாளர் அறிக்கை | அசல் |

2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சம்பவ இடத்திற்கு சென்று நான் நேரடியாக விசாரணை செய்தேனா என்றால் இல்லை. ஆராய்வாளர்கள் தான் விசாரணை செய்தார்கள். எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் ஆராய்வாளர்கள் எந்தெந்த சாட்சிகளை விசாரணை செய்தார்கள் என்ற விவரம் இல்லை என்று சொன்னால் சமீரா பானு என்பவரின் உறவினர்களை விசாரணை செய்து இறப்புச்சான்றிதழ், ஆதார் அட்டை மற்றும் வாரிசுச்சான்றிதழ் பெற்றுள்ளார். KL 37 D 3196 என்ற வாகன உரிமையாளர் மற்றும் வாகன ஓட்டுநரை விசாரித்துள்ளார். மேற்கண்ட சாட்சிகளை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்து கையெழுத்து பெற்றுள்ளீர்களா என்றால் இல்லை. வாகன ஓட்டுநர் வீரமணி என்பவர் மது அருந்தி போதை காரணமாக வாகனத்தை ஓட்டி அவரது அஜாக்கிரதையினால் தான் விபத்து ஏற்பட்டது என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கை மற்றும் சடலக்கூறாய்வு அறிக்கையில் மது போதையில் ஓட்டுநர் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவர் வழங்கிய சடலக்கூறாய்வு அறிக்கையில் ஓட்டுநர் மது போதையில் இறந்தார் என்பது குறித்து இறுதியாக எந்த கருத்துரையும் வழங்கவில்லை. இறந்து போன நபரின் உடலில் இருந்து

எடுக்கப்பட்ட 100மி.லி இரத்தம் பரிசோதனைக்காக எடுத்து பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டு அந்த பகுப்பாய்வு அறிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. ஓட்டுநர் சம்பவ நாளில் எந்த வித மதுவும் அருந்தவில்லை என்றும், நாங்கள் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ள வாகன ஓட்டுநர் தான் பொறுப்பு என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் உள்ள புலன் விசாரணை ஆராய்வாளர்கள் சம்பவ இடம் செல்லாமலும், சாட்சிகளை யாரையும் விசாரிக்காமலும் அலுவலகத்தில் இருந்து கொண்டு ஆவணங்களை பெற்று ஆராய்வாளர் அறிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் தாக்கல் செய்த எ.ம.சா.ஆ.1 ஆவணம் ஏற்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திற்கு புலன் விசாரணை அதிகாரி நியமித்து அறிக்கை தாக்கல் செய்ய சட்டப்படி அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை:–</u>**

விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் தான் இந்த விபத்து

ஏற்பட்டது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் இந்த விபத்திற்கு காரணம் இல்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நான் நஷ்ட ஈடு கொடுக்கும் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக 3ம் எதிர்மனுதாரரை பொறுப்பேற்க நான் சொல்வதற்கு சட்டத்தில் இடமில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்காக எங்களுடைய நிறுவனம் தான் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.